Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 272

செவ்வாய்க்கிழமை
26 ஓகஸ்ட் 2025

ஆவணி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

படகுகளை மீட்பதற்கு

## இந்திய மீனவர்கள் யாழில்!

யாழ்ப்பாணம், ஓக. 26
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதற்குப் பயன்படுத்தப் பட்ட, ஏழு இழுவைப் படகுகள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட் ☞ 11



செம்மணிக்கு நீதிகோரி

# வடக்கு - கிழக்கில் கையெழுத்துப் போர்

## தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில்

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 26**

**செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணை கோரி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 29ஆம் திகதி கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.** ☞ 11

## செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வெல்லை அகலிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 26
அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் நேற்று மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இதனால் மேலும் பல என்புத் தொகுதிகள் மீட்கப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது.
செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் பகுதி நடவடிக்கைகள் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. இதன்போதே, புதைகுழியின் ☞ 11

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியாகின

கொழும்பு, ஓக. 26
2024 - 2025 கல்வியாண்டுக்கானபல்கலைக் கழக அனுமதிக்கான 'சற் ஸ்கோர்' வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித் துள்ளது. ☞ 11

பொருண்மியத்தில் நலிவுற்ற

## 108 இணையர்களுக்கு சந்நிதியில் திருமணம்!

யாழ்.வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 26
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில், நாளைமறுதினம் 28ஆம் திகதி ஒரேநாளில் 108 திருமணங்களை நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:- ☞ 11

இராணுவத்தை அகற்றுமாறு போராட்டம்

விரிவு பக்கம்:- 06

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி வடக்கு – கிழக்கில் சனியன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 26
சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30ஆம் திகதியன்று, இலங்கையில் இறுதிப் போரின்போதும் அதற்கு முன்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி வடக்கு - கிழக்கு ரீதியாக பெரும் போராட்டம் இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்ததாவது:- ☞ 11



## பன்றிகளால் ஒருபோதும் நரியை வீழ்த்தமுடியாது

ரணிலின் கைது தொடர்பில் ஹிருணிகா ஆவேசம்

கொழும்பு, ஓக. 26
பன்றிகளால் நரியை ஒருபோதும் கொல்லமுடியாது. ஆதலால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தவறான இடத்தில் கைவைத்துள்ளது - இவ்வாறு ☞ 11

## ரணிலின் விடுதலையை வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் இன்று போராட்டம்!

அழைப்பு விடுத்தது ஐ.தே.க.

கொழும்பு, ஓக. 26
முன்னாள் ஜனாதிபதி ரணிலின் விடுதலையை வலியுறுத்தி, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கொழும்பில் இன்று போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளன.
ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள ரணில் தொடர்பான வழக்கு, நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்காக எடுக்கப்படவுள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே, ☞ 11

### முச்சந்தி முரளி

'சந்நிதியான்ர திருவிழா இந்தக் கலியானத்திருவிழாவால இன்னும் களைகட்டப்போகுது கண்டியளோ'

## தனிக்கட்சி விளையாட்டு இலங்கையில் எடுபடாது

முன்னாள் அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 26
சில நாடுகளில் உள்ளதைப் போன்று, இலங்கையிலும் தனிக் கட்சி முறைமையை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தால், அந்த நடவடிக்கைகள் வெற்றியளிக்காது என்று முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடந்த ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட ☞ 11

வித்தியா கொலை வழக்கு

## பிரதிவாதிகளின் மேன்முறையீடு நவம்பர் 6ஆம் திகதி விசாரணை

கொழும்பு, ஓக. 26
2015ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை நவம்பர் மாதம் 6ஆம் திகதி விசாரிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4174 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 32 33 38 46 |
| விசேட எழுத்து | O |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1241 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 18 31 52 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0200 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 6 8 0 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2280 |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 41 68 70 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5932 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 4 6 8 2 7 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1962 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 13 46 64 68 |
| விசேட எழுத்து | T |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0507 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 8 2 7 3 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0048 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 26 50 51 |

# எதிரணிகளின் ஒன்றிணைவு அரசாங்கத்தை அசைக்காது!

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.26**

**எதிரணிகளின் ஒன்றிணைவு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எவ்விதத்திலும் சவால் கிடையாது. கள்வர்களைக் காப்பதற்காகவே அவர்கள் கூட்டுச்சேர்ந்துள்ளனர் என்று ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்திப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிரணிகள் திட்டமிட்டுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த காலங்களிலும் எதிரணிகள் ஒன்றிணைந்து செயற்பட்டன. எவ்விதச் சவாலும் ஏற்படவில்லை. கூட்டுச் சேர்ந்துள்ளவர்களில் 90 சதவீதமானோருக்கு வழக்குகள் உள்ளன. ஆகவேதான் குற்றமிழைத்தவர்கள் தம்மைத் தற்காத்துக்கொள்ளக் கூட்டு சேர்ந்துள்ளனர். எனினும், சட்டம் தனக்குரிய கடமையை உரிய வகையில் செய்யும். சட்டமென்பது அனைவருக்கும் சமம். சட்டத்தைசெயற்படுத்தும்போது அதற்கு எவரேனும் தடையேற்படுத்த முற்பட்டால் அது நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் செயற்பாடாகவே அமையும்-என்றார். (எ-44)

# விசாரணை வளையத்துக்குள் யூடியூபர்

கொழும்பு, ஓக.26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது தொடர்பில் முன்னரே தகவல் வெளியிட்ட யூடியூபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அளித்த முறைப்பாட்டுக்கு அமைய இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வாக்குமூலம் வழங்கச் செல்லும்போது கைது செய்யப்படுவார் என யூடியூபர் ஒருவர் காணொலி வெளியிட்டிருந்தார். இது தொடர்பாக பலத்த விமர்சனங்கள் எழுந்திருந்தன. இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமையத் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் வினவியபோது, இது தொடர்பான விசாரணையை புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# நான்கு காணொலிகளில் ரணில் கைதுக்கு விளக்கம்

கொழும்பு, ஓக.26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விளக்கமறியல் தொடர்பாக நான்கு விளக்கக் காணொலிகளை அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது. இந்த விளக்கங்கள் ரணில் விக்கிரமசிங்கவின் கைது தொடர்பில் வெவ்வேறு கோணங்களில் இருந்து வழங்கப்பட்டுள்ளன.

சமூகவியல் விளக்கத்தை களனி பல்கலைக்கழக மக்கள் தொடர்புத் துறைத் தலைவர் மனோஜ் ஜிந்தாச வழங்கியுள்ளார். மத மற்றும் நல்லிணக்கக் கண்ணோட்டத்தை தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் ஓமரே புண்யசிறி தேரர் வழங்கியுள்ளார்.

சட்ட விளக்கத்தை மூத்த சட்டக் கல்வியலாளர் பேராசிரியர் பிரதிபா மகாநாமஹேவா வழங்கியுள்ளார். அதேநேரம் ஊடக மற்றும் சமூகவியல் கண்ணோட்டத்தை ஊடகவியலாளர் நந்தன வீரரத்ன வழங்கியுள்ளார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0640 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 0 6 0 6 5 9 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2906 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 17 32 45 54 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 18 37 39 62 |
| வெற்றி வாரம் | 5067 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| மீனம் | |
| வெற்றி இலக்கம் | 02 41 53 57 |
| சீட்டிழுப்பு வாரம் | 4618 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கம் | 03 23 53 69 |
| வெற்றி வாரம் | 2082 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 19 24 29 45 |
| வெற்றி வாரம் | 2732 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 25.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 18 29 39 62 |
| வெற்றி வாரம் | 2155 |

# ரணிலுக்காக உருகும் எரிக் சொல்ஹெய்ம்!



கொழும்பு, ஓக.26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் அமைதித் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அதிருப்தி வெளியிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதியை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். தனது சமூகவலைத்தளப் பக்கத்தில் பதிவேற்றியுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 2022ஆம் ஆண்டில் நாடு பொருளாதார மற்றும் அரசியல் குழப்பம் அடைந்தபோது இலங்கையைக் காப்பாற்ற முன்வந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க. ரணிலுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தகுதியற்றவை. அவை உண்மையாக இருந்தாலும், ஐரோப்பாவில் அவை எந்தவொரு குற்றமாகவோ அல்லது ஏற்றுக்கொள்ளமுடியாத நடத்தையையும் கொண்டிருக்காது.

ஊழலுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு நான் முழு ஆதரவை வழங்குகிறேன், ஆனால் தயவுசெய்து உண்மையான பிரச்சினைகளில் கவனம் செலுத்துங்கள் என்று அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார். (எ-இ)

# நீதிமன்ற விடயங்களில் தலையிடப்போவதில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.26

ரணில் விக்கிரமசிங்க விடயத்தில் நீதிமன்ற விவகாரங்களில் நாம் தலையிடவில்லை. நீதிமன்றம் ஊடாக நீதி கிட்டும் என்ற நம்பிக்கை உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று இரண்டாவது நாளாக சஜித் நேரில் சென்று பார்வையிட்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கவேண்டும். சட்டமென்பது நீதியாகச் செயற்படுகின்றது என்பது தென்படவேண்டும். எமது நாட்டு நீதிமன்றக் கட்டமைப்பை நாம் மதிக்கின்றோம். அது சுயாதீனமாகச் செயற்படுகின்றது என நம்புகின்றோம். ஆனால் நீதிமன்ற நடவடிக்கைக்கு முன்பாக தீர்ப்புத் தொடர்பில் சிலர் கருத்து வெளியிடுவதுதான் சிக்கலாகியுள்ளது. அது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும். நாட்டு மக்கள் அநீதியை எதிர்க்கின்றனர். நீதிக்காக ஒன்றுகூடும் உரிமை அவர்களுக்கு உள்ளது. அநீதிக்கு எதிராக எமது நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்து போராடுவது வழமையானது-என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச, தனியார் தூரப் பிரதேச பஸ் சேவை

# இணைந்த நேர அட்டவணை நேற்றுமுதல் நடைமுறைக்கு

**கொழும்பு, ஓக.26**

**இலங்கை போக்குவரத்துச்சபை மற்றும் தனியார் பஸ்களின் தூரப் பிரதேச சேவைக்கான ஒருங்கிணைந்த நேர அட்டவணை நேற்று நள்ளிரவுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

கொழும்பு - சிலாபம், கொழும்பு - புத்தளம், கொழும்பு - ஆனமடுவ, கொழும்பு - எலுவான் குளம் மற்றும் கொழும்பு - கல்பிட்டி ஆகிய மார்க்கங்களில் இந்த ஒருங்கிணைந்த நேர அட்டவணை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு - கல்பிட்டி, கொழும்பு - மன்னார், கொழும்பு - தலைமன்னார், கொழும்பு - குளியாப்பிட்டி, கொழும்பு - நிக்கவரட்டிய, கொழும்பு -அநுராதபுரம், கொழும்பு - வவுனியா, கொழும்பு - கிளிநொச்சி, கொழும்பு - யாழ்ப்பாணம், கொழும்பு - காங்கேசன்துறை, கொழும்பு - காரைநகர் மற்றும் கொழும்பு - துனுக்காய் ஆகிய பகுதிகளுக்கும் புதிய நேர அட்டவணை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு - புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தையில் அமைந்துள்ள தனியார் பஸ் நிலையத்திலிருந்து பயணங்கள் ஆரம்பிக்கப்படும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அத்துடன் நான்கரை மணி நேரப் பயணத்துக்குப் பின்னர், பஸ் ஓட்டுநருக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஓய்வு நிறுத்தம் வழங்கப்படும் எனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

## மனைவி தேடிய புதையலால் கைதான உதித்த லியனகே!

கொழும்பு, ஓக.26

கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உதித்த லியனகே குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரது மனைவி அநுராதபுரம், திபிரிகடவலப் பகுதியில் உள்ள விகாரை ஒன்றுக்கு அருகில் புதையல் தோண்டியமை தொடர்பாகவே அவர் கைதுசெய்யப் பட்டுள்ளார். புதையல் தோண்டப்பட்டதாகக் கூறப்படும் இடத்துக்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உதித்த லியனகே சென்றமைக்கான ஆதாரங்கள் கிடைத்ததை அடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதையல் தோண்டிய சம்பவம் தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் மனைவி உட்பட 9 பேர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)



## வெல்லம்பிட்டியவில் துப்பாக்கிப்பிரயோகம்

கொழும்பு, ஓக.26

வெல்லம்பிட்டி, கிட்டம்பஹுவப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் நேற்று அதிகாலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விடுதியில் தங்கியிருந்த இருவரை இலக்குவைத்து இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## தூசு தட்டப்படும் லசந்த படுகொலை விசாரணைகள்



கொழும்பு, ஓக.26

**ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மீண்டும் ஆரம்பித்துள்ளது.**

முன்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு மேலதிகமாக தற்போது புதுப்பிக்கப்பட்ட விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி இரத்மலானையில் வைத்து லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். (எ-இ)

## போராட்டத்தைக் கைவிட்டனர் அரச மருத்துவ அதிகாரிகள்

கொழும்பு, ஓக.26

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று ஆரம்பிக்கவிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்துக் கைவிடப்பட்டது.

சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் வழங்கப்பட்ட எழுத்துமூல உறுதியை அடுத்து இந்தத் தொழிற் சங்கப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருத்துவர்களின் இடமாற்றம் உட்படப் பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து நேற்றுக் காலை 8 மணிமுதல் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்திருந்த நிலையிலேயே, போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. அதேவேளை, தபால் தொழிற் சங்கங்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டமும், துறைசார்ந்த அமைச்சருடனான கலந்துரையாடலை அடுத்துக் கைவிடப்பட்டது. (எ-இ)




*அனைத்து ராஜதந்திரங்களும் வீணாப் போச்சுதே*

நாயளுக்கு கரண்ட் 'போஸ்ட்டைக்' கண்டவுடன காலைத்தூக்கிற பழக்கம் இருக்கிறமாதிரி, சிறைக்குப் போறதெண்டதுமே உந்த அரசியல்வாதியள் எல்லாருக்கும் உலகத்தில இல்லாத புதுப்புது வருத்தங்கள் வந்திடும். அவ்வளவு நாளும், துள்ளிக்குதிச்சுக் கொண்டு திரிஞ்சவைக்கு சிறையில அடைடப் போறம் எண்டதும் எங்கையிருந்துதான் உந்த வருத்தங்கள் வந்து தொத்துதோ எண்டு தெரியேலை. உலகத்தில எல்லா அரசியல்வாதியளுக்கும் வாற இந்தச் சிறைக்காய்ச்சல், 'அரசியல் ராஜதந்திரங்கள் எல்லாத்தையும் கரைச்சுக் குடிச்ச' ரணிலுக்கும் வந்திட்டுது. அவரை அரஸ்ட் பண்ணி, ஏழெட்டு மணித்தியாலங்களாக நீதிமன்றத்தில இருக்கேக்கக்கூட, கோர்ட்டும் சூட்டும் போட்டு ஆள் நல்ல உசாராத்தான் இருந்தவர். ஆனால் இரவு அவரை மறியலில வைக்கச்சொல்லி, நீதிமன்றம் ஓர்டர் போட்டு சிறைக்குக் கொண்டுபோனபிறகு, கரண்டில அடிபட்ட காகம் மாதிரி சுருண்டு விழுந்திட்டாராம். உடனேயே ஆள சிறைச்சாலை ஆஸ்பத்திரியில சேர்த்திட்டினம். அங்க அவருக்கு சரியான ட்ரீட்மென்ட் செய்யேலாது எண்டு இப்ப ரணிலைக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில வைச்சிருக்கினம்.

அவருக்கு நீர்ச்சத்துக்குறைபாடு இருக்கெண்டும், அதுக்கு நாலைஞ்சு நாள் ட்ரீட்மென்ட் செய்தால் தான் வருத்தம் முழுசா மாறுமெண்டும் கொழும்பு பெரியாஸ்பத்திரி டாக்குத்தர்மார் சொல்லிப்போட்டினம். இப்ப அதுதான் ரணிலாருக்குச் சிக்கலாப் போட்டுது. சிறைக் காய்ச்சல் அவருக்கு ஏன் வந்தது எண்டு எல்லாருக்குமே தெரியும். சிறைக்குப் போறதெண்டால் தங்கட கௌரவம் குறைஞ்சுபோடும், அங்க வசதியள் குறைவு எண்டதுக் காகத்தான் மறியலில வைச்சவுடன் எல்லா அரசியல் வாதிமாரும் 'வயித்துக்குத்து, நெஞ்சுக்குத்து' எண்டு ஏதும் சாட்டுகளைச் சொல்லி ஆஸ்பத்திரியில போய் படுத்திடுவினம். ஆஸ்பத்திரியில இருந்தால் உப்புச்சப்பில்லாத சிறைச்சாப்பாட்டைச் சாப்பிடத் தேவையில்லை. வீட்டையிருந்தே சாப்பாடுவரும். சிறைச்சாலைச் சிமெந்துக் கட்டிலில படுக்காமல், ஆஸ்பத்திரியில நல்ல மெத்தைக் கட்டிலில படுக்கலாம். சுத்திவர சொந்தபந்தம் எண்டு நிப்பினம். இப்பிடிக் கனக்க வசதியள். அவையள் மறியலில இருக்கிறவைமாதிரி இல்லாமல், ஏதோ 'பொடிச் செக்கிங்' செய்யப்போனவைமாதிரி சகல சம்பத்துகளோடையும் கலாதியா இருந்துட்டு வரலாம். அப்பிடித்தான் ரணிலும் பிளான் பண்ணினவர். என்னென்னவோ விசயங்களுக்கெல்லாம் தன்ர நரிப் புத்தியைப் பாவிச்ச ரணிலுக்கு, இந்தச் சிறை விசயத்தில மட்டும் கொஞ்சம் பிழைச்சுப் போட்டுது.

இந்தச் சிறைக்காய்ச்சல் நாடகம், அவருக்கு வசதியா இருக்க வழிவிட்டிருக்கு. ஆனால் அதே வருத்தக்கார நாடகம்தான் அவருக்குப் பிணை கிடைக்கிறதிலையும் சிக்கலைக் கொண்டந்திருக்கு. அவரை 26ஆம் திகதி (இண்டைக்கு) வரைக்கும் தான் மறியலில வைக்க நீதிமன்றம் ஓர்டர் போட்டது. ஆனால் இப்ப ரணில் ஆஸ்பத்திரியில ஏலாது எண்டு படுக்க, அங்க இருந்த டாக்குத்தர்மார் 'ரணிலின்ர நீர்ச்சத்துக்குறைபாட்டை மாத்த நாலைஞ்சுநாள் தேவை, அதுவரைக்கும் அவர் ஆஸ்பத்திரியில 'இருக்கோணும்' எண்டு சொல்லிப் போட்டினம். அதால இண்டைக்கு ரணிலார் நீதிமன்றத்துக்குப் போகேலாத நிலை. அதால அவர் பிணையில போறது பின்னுக்குப் போகுமெண்டு சொல்லுப்படுகுது. பாப்பம், அதுக்கும் ஒரு தந்திரத்தை ரணிலார் காட்டாமலோ விடப்போறார்?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் முக்கியமான பொறுப்பு ஒன்றுக்கு உங்கள் பெயர் பரிந்துரைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனாலும், வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். எதிரிகளால் மறைமுகத் தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கை தேவை. கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். பிற்பகலுக்குமேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மாலையில் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அதிகாரிகளின் பாராட்டுகள் மனதுக்கு உற்சாகம் தரும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்குத் திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படக்கூடும். ஆனால், குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பார்கள். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம்.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படும். வீண் செலவுகளால் கையிருப்புக்கரையும். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் உண்டாகும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. மாலையில் வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**மீனம்:** உற்சாகமான நாள். வாழ்க்கைத்துணை வழியில் சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் தேவை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தில் மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

# பிறந்த எண் பலன்கள்

ஜோதிட ரீதியாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தந்த எண்ணிற்கேற்ப அவரவரின் இயல்புகளும் அமைந்திருக்கும். ஒன்றாம் எண்ணிலிருந்து 31ஆம் எண்வரை எந்த எண்ணில் பிறந்திருந்தாலும் அதன் கூட்டுத்தொகையானது ஒன்றிலிருந்து 9 வரையே இருக்கும்.




இந்த எண் அனைவராலும் மிகவும் விரும்பப்படும் எண்ணாகும். அனைத்து எண்களுக்கும் இந்த எண் பொதுவாக உள்ளது. மிக நன்மையும், அதிர்ஷ்டமும் தருவது இந்த எண்ணாகும். புதனின் ஆதிக்கம் வலுத்து இருப்பவர்களுக்குப் பெருத்த யோகங்களைக் கொடுக்கும். 5 மட்டும் யாருக்கும் தீமை புரியாது! சோதிட சாத்திரத்தில் நவக்கிரகங்களில் சந்திரனுக்கு மட்டும் எல்லா இராசி வீடுகளிலும் சமமாகவும், நட்பாகவும் (விருச்சிகம் தவிர) சொல்லப்பட்டுள்ளது! அதனால்தான் சந்திரனின் ஆதிக்கம் ஜாதகத்தில் பொதுவாக எல்லா இராசிகளுக்கும் நன்மையான பலன்களையே கொடுக்கும். கோசாரப் பலன்களும் சந்திரனின் நிலையையே அடிப்படையாகக்கொண்டுள்ளது.

மற்ற எண்காரர்கள் தங்களது துன்பங்களையும், துயரங்களையும் கண்டு கலங்கும்போது இவர்கள் மட்டும், அவைகளைச் சவால்களாக எடுத்துக் கொள்வார்கள்.

இவர்களது பேச்சில் கேலியும் கிண்டலும், சிரிப்பும் கலந்திருக்கும். எத்தகைய நபர்களைச் சந்தித்தாலும், தங்களது தனித்தன்மையை அவர்களுக்குச் சீக்கிரம் உணர்த்திவிடுவார்கள். பல வருடகாலம் நண்பர்களாக நீடித்துத் தொடர்புகொள்ளும் தன்மையும், கவர்ச்சியும், நட்புப் பலமும் இந்த 5 எண்காரர்களுக்கு உண்டு. எப்போதும் எடுப்பாகவும், அழகாகவும், ஆடைகளையும், அழகு சாதனங்களையும் அணிந்துகொள்ளும் விருப்பம் கொண்டவர்கள். இவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட எந்தத் துறையிலும், தங்களது திறமையின்மூலம் விரைந்து உச்சியை அடைந்துவிடவேண்டும் என்று துடிப்பார்கள். இவர்கள் சாப்பிடுவதில் வேகமாக இருப்பார்கள். பேச்சிலும் நடையிலும் வேகம் உண்டு!

தங்களது சொந்தப் படைப்புகளைவிட அடுத்தவர்களின் கருத்துகளையும், விஷயங்களையும் தொகுத்து அவைகளை ஆராய்ந்து முடிவுக்கு வரும் அறிவுத் துறைகளில் இவர்கள் சிறப்பாக விளங்குவார்கள். ஒரே சமயத்தில் பல காரியங்களில் கவனம் செலுத்தும் அஷ்டாவதானிகள் இவர்கள்தான். புகழ்பெற்ற உலகக் கவிஞர் ஷேக்ஸ்பியர், மெஸ்மரிசம் கண்டுபிடித்த மெஸ்மர் போன்றவர்களெல்லாம் இந்த எண்ணில் பிறந்தவர்களே!

**குடும்ப வாழ்க்கை:** ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கை என்பது திருப்தி அளிப்பதாகவே இருக்கும். கூட்டுக் குடும்பமாக இருந்தாலும், தனிக் குடும்பமாக இருந்தாலும் வரக்கூடிய வாழ்க்கையை அனுசரித்து நடப்பவராக இருப்பர். நல்ல அறிவாற்றலும், கல்வித் தகுதியும் உடையவராக இருப்பார். சிறுசிறு பிரச்சினைகளால் கருத்துவேறுபாடுகள் அவ்வப்போது தோன்றி மறையும். இவர்கள் சுகமாக வாழ்க்கை வாழ்வதையே விரும்புவார்கள்.

**பொருளாதாரம்:** ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்களுக்குபோது மென்கிற அளவிற்கு பொருளாதார நிலை திருப்தியளிப்பதாக இருக்கும். பகட்டான செல்வாக்கு நிறைந்த வாழ்க்கை அமையும். ஓய்வு நேரங்களிலும் உடலுழைக்காமல் மூளையைப் பயன்படுத்தி ஏதோ, ஒரு வழியில் சம்பாதிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். ஆதலால் பணவரவுகள் திருப்திகரமாகவே இருக்கும். சேமிப்பும் ஓரளவுக்கு சிறப்பாக அமையும். பெரிய முதலீடுகளில் செய்யும் காரியங்களில் மிகவும் கவனமுடன் செயற்படுவது மிகவும் உத்தமம்.

**நண்பர்கள், பகைவர்கள்:** ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்கள் சிரிக்க சிரிக்கப் பேசக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள் என்பதால், இவர்களுக்கு நண்பர்கள் வட்டாரம் அதிகம் இருக்கும். இவர்களின் நகைச்சுவையுணர்வால் பலரையும் கவர்ந்திழுப்பர்.

**அதிர்ஷ்ட தேதி-5,14,23,6,15,24 அதிர்ஷ்ட நிறம்-சாம்பல், வெளிர் நீலம், வெளிர் பச்சை அதிர்ஷ்ட திசை-வடக்கு, அதிர்ஷ்ட கல்-வைரம், மரகதப் பச்சை, அதிர்ஷ்ட தெய்வம்-ஸ்ரீவிஷ்ணு**

## கந்தபுராண பூர்த்தியும் திருக்கல்யாணமும்

யாழ்ப்பாணம், ஓக.26

நீர்வேலி தெற்கு ஸ்ரீ முருகையா கோவிலின் கந்தபுராணப் படனம் பூர்த்தியும் திருக்கல்யாண அஷ்டோத்திர சங்காபிஷேகமும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். காலை 9.30 மணிக்கு சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று 108 சங்காபிஷேம் இடம்பெறும். தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல் இடம்பெற்று சுவாமி வீதி உலா நடைபெறும். (ஏ-25.17)

## விநாயகர் சதுர்த்தி விரத வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஓக.26

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆவணிச்சதுர்த்தித்திருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. சிறப்பு பூஜைகள், 108 சங்காபிஷேகம், வசந்தமண்டப பூஜை என்பன இடம்பெற்று சுவாமி வீதி உலாவும் இடம்பெறவுள்ளது.

★★★★

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி உற்சவம் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி விஷேட பூஜைகள் இடம்பெற்றுத் தொடர்ந்து சுவாமி வீதியுலா இடம்பெறவுள்ளது.

★★★★

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தித் திருவிழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பாகி நடைபெறும். தொடர்ந்து நண்பகல் மகேசுவரர் பூஜையும் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# ஆழமறியாமல் காலை விட்டால்...!

பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சிக்கலைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது ரணிலின் கைது விவகாரம். ரணில் ஒன்றும் பத்தரை மாற்றுத் தங்கமான அரசியல்வாதியல்ல என்பது எல்லோருக்குமே நன்கு தெரியும். அவர்மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வந்திருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டதைப் போன்று பட்டலந்த வதைமுகாம் தொடக்கம் பிணைமுறி மோசடி வரைக்கும் ரணில்மீது வெவ்வேறு வகையான, கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ளன. அந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ரணிலைக் கைதுசெய்திருந்தால் எல்லோருமே வாய்பொத்தியபடி இருந்திருப்பார்கள். ஆனால் அந்தக் கடுமையான குற்றச்சாட்டுகள் தொடர்பில் நடவடிக்கை எதுவும் எடுக்காமல், அமெரிக்காவுக்குச் சென்று வரும்வழியில், திடீரென 'திருப்படா வண்டியை!' என்று தன் மனைவியின் பட்டமளிப்பு விழாவுக்காக பிரிட்டனுக்குச் சென்ற விவகாரத்தையே தோண்டியெடுத்து, அதுதான் 'நாட்டின் மகா ஊழல்' என்பது போல ரணிலைக் கைதுசெய்து சிறையிலும் அடைத்திருக்கிறது திசைகாட்டி அரசாங்கம். இது ரணிலுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் அரசியல் செய்யப் பெரும் வாய்ப்பாகிவிட்டது.

அரசநிதியைத் தவறாக, தனிப்பட்ட தேவைக்காகத் துஷ்பிரயோகம் செய்தார் என்ற இந்த வழக்கை ரணில் தரப்பு மிக எளிதாக ஊதித்தள்ளிவிடும் என்றே சட்டவல்லுநர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். இதனைவிட எத்தனையோ மடங்கு நிதியை மோசடி செய்த பிணைமுறி விவகாரத்தையே ஒன்றுமில்லாமல் செய்த ரணிலுக்கு இந்த வழக்கை எதிர்கொள்வதென்பது பெரிய விடயமாக இருக்கப்போவதில்லை. ஆனால் ரணில் தரப்பும், இந்த வழக்கை வைத்துக் குளிர்காயும் நிலையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டது. இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகப் பதவி வகித்த எவருமே, பதவிக்காலத்துக்குப் பின்னர் கைதாகியிருக்கவில்லை. நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி என்ற ரணிலின் சாதனைப் பட்டியலில், முதன்முதலாக கைதுசெய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி என்ற விடயமும் இணைந்துவிட்டது. ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியிடம் தோற்றுப்போன மஹிந்த, அந்தத் தோல்வியை எப்படி தன் அரசியல் மீளெழுச்சிக்கான முதலீடாக்கினாரோ அதே யுக்தியையே இப்போது ரணிலும், அவரோடு அவசரமாகக் கை கோர்த்திருக்கும் எதிர்க்கட்சிகளும் கைக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. கடந்த மூன்று தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு முன்னால் மண்டியிட்ட எதிர்க்கட்சிகள் தம்மிடையே ஒன்றுபட்டு, அரசாங்கத்துக்கு எதிராக அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன. குறிப்பாக வெளிநாட்டு இராஜதந்திரிகளை ரணிலின் கைது விடயத்தில் தலையிடுமாறும் அவர்கள் அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். சில முக்கியமான நாடுகள், ரணில் விடயத்தில் மென்போக்கைக் கைக்கொள்ளுமாறும் கண்டிப்பாக அறிவுறுத்தியுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.


இவையெல்லாம் தேசிய மக்கள் சக்தியினருக்குத் தலையிடியாக மாறியுள்ளன. ரணிலைப் பாரதூரமான குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்திருந்தால் இப்படியெல்லாம் அங்கலாய்த்திருக்கத் தேவையில்லை. அவரின் குற்றத்தின் தன்மையைப் பார்த்தே மற்றவர்கள் ஒதுங்கியிருப்பார்கள். ஆனால் வால் போகின்ற வழக்குகளை விட்டுவிட்டு நூல் போகின்ற வழக்கை முன்னிறுத்தி ரணிலைக் கைதுசெய்த விடயம், பூமராங் போல ஆளும் தரப்பினருக்கே திருப்பியடிக்கத் தொடங்கியிருக்கிறது. ரணிலைவிடவும் மோசடிமுதலைகள் வெளியே சுற்றிக்கொண்டிருக்கையில், அரசியலில் இருந்து ஓய்வுபெறுவது பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும் ரணிலின் மீது அரசாங்கம் கைவைத்ததை மக்களிலும் ஒருசாரார் ஏற்றுக்கொள்ளவில்லை. 'என்ன இருந்தாலும், பொருளாதாரத்தில் சரிந்துபோன நாட்டைத் துணிச்சலுடன் முன்வந்து மீட்டெடுத்தவரைக் கைதுசெய்த அரசாங்கம், பொருளாதாரக் குற்றவாளிகளான கோத்தாபயவையோ மஹிந்தவையோ ஏன் கைதுசெய்யவில்லை? அவர்களையல்லவா முதலில் கைதுசெய்திருக்க வேண்டும். அவர்களைக் கைதுசெய்திருந்தால் அரசுமீதான மக்களின் நம்பிக்கையும் அதிகரித்திருக்குமே' என்று ஆதங்கப்படுகின்றனர். ஆழமறியாமல் காலை விட்டால் என்னவாகும் என்பதை அரசாங்கம் இப்போதுதான் அனுபவரீதியாகக் கற்றுக்கொண்டிருக்கிறது. இதனை ஒரு பாடமாக வைத்து, இனிமேலாவது ரணில் போன்ற மக்கள் விரோத அரசியல்வாதிகள் புரிந்த பாரதூரமான குற்றங்களுக்காக அவர்களைக் கைதுசெய்தாலே , அந்தக் குற்றங்களுக்கான நீதியும், மக்களின் செல்வாக்கும் கிடைக்கும். இல்லையேல் வெறும் அரசியல் பழிவாங்கலாகவே இந்தக் கைதுகள் திசைதிருப்பப் பட்டுவிடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உலக எண்ணிக்கையில் ஒருவனாக இருப்பதைவிட உலகமே எண்ணும் அளவுக்கு இரு.

அப்துல்கலாம்




# சுற்றிவளைப்பில் 4,544 பேர் கைது!

கொழும்பு, ஓக.26

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 4 ஆயிரத்து 544 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 26 பேரும், சந்தேகத்தின் பேரில் 676 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 204 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 138 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 67 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 11 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 422 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## முன்னாள் ஆளுநரின் பிணை மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.26

ஊழல் குற்றச்சாட்டில் தலா 16 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள வடமத்திய மாகாண முன்னாள் ஆளுநர் எஸ்.எம். ரஞ்சித் மற்றும் அவரது மைத்துனி சாந்தி சந்திரசேன ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை எதிர்வரும் 9ஆம் திகதி பரிசீலிக்க கொழும்பு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்று மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிணை மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## அளுத்கமகேவின் பிணை மனு விசாரணை ஒத்திவைப்பு

கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நலின் பெர்னாண்டோ ஆகியோர், தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கொழும்பு உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தது. முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நலின் பெர்னாண்டோ ஆகியோர் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதால், இறுதி முடிவு வரும் வரை தங்களைப் பிணையில் விடுவிக்கக்கோரி இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (எ-இ)

## ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி

கொழும்பு, ஓக.26

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்துள்ளது. டொலர் ஒன்றின் கொள்வனவு விலை நேற்று 298 ரூபா 23 சதமாகப் பதிவாகியுள்ளது. விற்பனை விலை 305 ரூபா 76 சதமாகப் பதிவாகியிருந்தது. ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 414.1296 ரூபாவாகவும், கொள்வனவு விலை 400.9432 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. (எ-இ)

# இலங்கைக்கு கடத்தவிருந்த போதைமாத்திரைகள் மீட்பு


மன்னார், ஓக.26

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பல லட்சம் வலி நிவாரணி மாத்திரைகள் தமிழகத்தின் உச்சிப்புளி அருகே தலைத்தோப்புக் கடற்கரையில் இராமநாதபுரம் கியூப் பிரிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. உழவியந்திரத்தில் கொண்டு வரப்பட்டு அவை கடற்கரையில் இறக்கப்பட்டுக்கொண்டிருந்த போது, கியூப் பிரிவு சுற்றிவளைத்துள்ளனர். கடத்தலில் ஈடுபட்டவர்கள் உழவியந்திரத்தைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர். தலா 80 கிலோ எடையுடைய 10 பெட்டிகளில் பொதிசெய்யப்பட்டிருந்த பல இலட்சம் வலி நிவாரணி மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தப்பியோடியோரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-56)

நாளை 27.08.2025
புதன்கிழமை - ஆவணி 11
சுபநேரம் : 04.35 - 06.05
ராகுகாலம் : 12.05 - 01.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம்களை அகற்ற வலியுறுத்தி பருத்தித்துறையில் கவனவீர்ப்பு!



வடமராட்சி, ஓக.26

இராணுவ முகாம்களை அகற்றக்கோரி பருத்தித்துறையில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டமும், ஊர்வலமும் மேற்கொள்ளப்பட்டன. பருத்தித்துறை நகர சபையும், பொதுமக்களும் இணைந்து இந்தப்போராட்டத்தை முன்னெடுத்தனர். 'பருத்தித்துறை நகரைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் பருத்தித்துறை நகரில் உள்ள சில இராணுவ முகாம்களை அகற்ற வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் காலை 8.30 மணியளவில் ஆரம்பித்த ஊர்வலம் பருத்தித்துறை நகர் வழியாக பிரதான வீதி ஊடாகப் பயணித்து பருத்தித்துறை பிரதேச செயலகத்தை சென்றடைந்தது. காணி விடுவிப்பு, இராணுவ வெளியேற்றம் என்பவற்றை வலியுறுத்திக் கோசங்கள் எழுப்பப்பட்டன. கோரிக்கைகள் அடங்கிய ஜனாதிபதிக்கான மனு, பருத்தித்துறைப் பதில் பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தனிடம் கையளிக்கப்பட்டது. பருத்தித்துறை நீதவான் வாசஸ்தலம், மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம், பருத்தித்துறை தபால் நிலையத்துக்குச் சொந்தமான கட்டடத்தொகுதி, நகரசபையின் வாடி வீடு மற்றும் தனியாருக்குச் சொந்தமான நிலப்பரப்பு களை ஆக்கிரமித்து பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவமுகாமானது போருக்கு பின்னரான நகரின் வளர்ச்சிக்குப் பெரும் தடைக்கல்லாக உள்ளது. பருத்தித்துறை நகரின் அடையாளமான வெளிச்சவீட்டு பகுதி கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலாத்துறை வளர்ச்சி மற்றும் கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. பருத்தித்துறை நகரின் வளர்ச்சி கருதியும் பருத்தித்துறை வாழ் மக்களின் நன்மை கருதியும் இராணுவ, கடற்படை முகாம்களை அகற்றவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு நகரசபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியப் பேரவை, ஜனநாயத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழரசு கட்சி, சுயேச்சைக் குழு, ஈழமக்கள் ஜனநாயக கட்சி என்பன ஆதரவு வழங்கியபோதும், தேசிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கவில்லை.

(எ-100)


## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
## INVITATION FOR BIDS - IFB 2025/05
### Council Fund

A. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Valikamam South Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, goods as specified in following Table.

B. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

C. To be eligible for contract award the successful bidder shall not have been blacklisted and shall need the following requirements and the additional details are provided in the bidding data sheet (Section II)

01) Bidders shall have valid business registration

02) Bidders shall also register themselves with the registrar of public contracts Sri Lanka, in terms of the public contract act no 03 of 1987 for the contracts exceeded Rs 5Mn.

D. Interested eligible bidders may obtain further information from the Chairman, Valikamam South Praddeshiya sabha, Chunnakam Conduct No (021 224 4045/0017), during the office hours and inspect the Procurement documents at the same address any working days for 9.00am to 3.00pm.

E. A complete set of Procurement documents in English language may be purchased by interested bidders on the submission of "Application for Procurement Documents" available in this office and upon payment of a non-refundable fee as specified in the table by cash on working days from 26.08.2025 to 08.09.2025 during 09.00 Hours to 15.00 Hours. The mode of payment will be by cash.

F. Bids must be delivered to Chairman, Valikamam south Pradeshiya sabha, K.K.S road, Maruthanarmadam, Chunnakam on or before 10.30 Hours of 09.09.2025. Late bids will be rejected. Bids will be opened immediately after closing in the presence of bidders or their representatives who choose to attend.

G. Bid shall be valid for a remind 77 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 105 days from the bid opening.

H. Pre-bid meeting will be held at Conference Hall, Valikamam south Pradeshiya Sabha, Chunnakam commencing at 10.00 am on 03.09.2025.

I. Regional Procurement committee will have the right to make final decision in the regarding the acceptance or rejection of bids.

| Bid security validity Period | 23.12.2025 | | | |
|---|---|---|---|---|
| Pre-Bid Meeting | 03.09.2025 | | | |
| Bid Opening & Closing | 09.09.2025 | | | |
| Reference No | Item | Qty | Nonrefundable fees | Bid Security |
| NP/04/41(15)/02/05/CF/2025/GENE | Supply and Installation of 3 Phase, 415V, 50Hz, 100 kVA Generator with Automatic Changeover Switch at Valikamam South Pradeshiya sabha, Chunnakam | 01 | 3,500.00 | 75,000.00 |
| NP/04/41(15)/02/05/CF/2025/Lift | Supply and Installation of Passenger elevator at Valikamam South Pradeshiya sabha, Chunnakam. | 01 | 3,500.00 | 120,000.00 |

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Valikamam South Pradeshiya Sabha,**
**Chunnakam.**
**26.08.2025**

(CR 59915) A



## வகுப்புக்கள்

தரம் 3 - 5 வரையான மாணவர்களுக்கு
அனைத்துப் பாடங்களும் மற்றும்
தரம் 3 - 11 வரையான மாணவர்களுக்கு
ஆங்கிலப் பாடமும் வீட்டில் வந்து
கற்பிக்கப்படும்

தொடர்புகளுக்கு:
**077 311 6202, 077 921 7997**


## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 • 02 • 1945



மறைவு
04 • 09 • 2016

### அமரர் V.P. வேலாயுதம்பிள்ளை

**(முன்னை நாள் உதவி அரசாங்க அதிபர்)**

**திதி : வளர்பக்க திருதியை**

தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வந்துதித்த அப்பாவே - உம் பிரிவை
ஆற்றோம் எம் ஐயா அழுகின்றோம் ஓவென்று
தேற்றுவார் யாருமில்லை தேறுவதற்கும் வழியில்லை
மாற்றமாம் வையகத்து நியதியென நினைந்து
இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கவென
வேண்டி மனம் ஆறுகின்றோம்.

**இல. 35/6, குமாரசாமி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்**

(CS/59226) J-1


## நேரக்கணிப்பாளர் தேவை

யாழ் பிராந்தியக் கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தில் நேரக்கணிப்பாளராகக் கடமையாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் எதிர்வரும் 30.08.2025 திகதிக்கு முன்னர் நேரில் வரவும். மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உள்ளன என்பதுடன் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்கு அருகிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**முகவரி - இல 260/22 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்**
**தொ.இல - 021 222 6924**

**தலைவர்**
**யாழ் பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற**
**பஸ் கம்பனிகளின் இணையம்**

(CS 59231) E


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேம்பொடுகேணி சீ. சீ. த. க. பாடசாலையில்

# கணிதபாட ஆசிரியர் இன்றி அல்லல்படும் மாணவர்கள்!

### பெற்றோர் சுட்டிக்காட்டு

பளை, ஓக. 26

**இத்தாவில் வேம்பொடுகேணி சீ. சீ. த. க. பாடசாலையில் கணித பாட ஆசிரியர் இன்மையால் க.பொ.த.சாதாரண தரப்பரீட் சைக்குத் தோற்றும் மாணவர்கள் கணித பாடத்துக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பெற்றோர் கவலை வெளியிட் டுள்ளனர்.**

கணிதபாட ஆசிரியர் இன்மையால் பாடசாலைத் தவணை ஆரம்பித்து ஒருவாறாகியும் மாணவர் தேர்ச்சி அறிக்கை வழங்கப்படவில்லை. கிளிநொச்சி கல்விவலயப் பரீட்சை யில் மாணவர்கள் தோற்றிய நிலை யில் கணித பாடத்துக்குரிய விடைத் தாள்கள் இன்னமும் திருத்தப்பட வில்லை. இதனால் கணித பாடத் துக்குரிய மதிப்பெண் இன்மையால் தேர்ச்சி அறிக்கை வழங்கப்பட வில்லை என்று பெற்றோர் தெரிவித் துள்ளனர். இது தொடர்பாகப் பாட சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது பாடசாலை யில் கணித பாடத்துக்கு இரு ஆசிரி யர்கள் உள்ளனர் என்றும், ஒருவர் பிரசவ விடுமுறையிலும் மற்றொ ருவர் சுகயீன விடுமுறையிலும் உள்ளனர் என்றும் பதிலளிக்கப்பட் டது. (ஏ-25.9)



## பெண்கள் சுய பொருளாதார உற்பத்தி நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்.உரும்பிராய் வடக்கில் புதிதாக அமைக்கப்பட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தினரின் "சங்கமம்" பெண்கள் சுய பொருளாதார உற்பத்தி நிலையம் கிரா மிய உழைப்பாளர் சங்கத்தின் தலைவர் என்.இன்பம் தலைமையில் கடந்த சனிக்கிழமை திறக்கப்பட்டது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந் திரகுமார் பொன்னம்பலத்தின் 2025ஆம் ஆண்டுக் கான பன்முகப்படுத்தப்பட்ட 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பொருளாதார உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்தி ரன், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன் குமார, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணிச் செயற்பாட்டாளர் திரு மதி கிருபா கிரிதரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ஏ-25,66)

## வீதிப் புனரமைப்பு

கொடிகாமம், ஓக.26

தென்மராட்சி வரணி கரம்பைக்குறிச்சி ஆழ்வார் மடம் வீதி தார் வீதியாகவும் அம்மாகடை முதலாம் குறுக்குத்தெரு வீதி கிரவல் வீதியாகவும் சீரமைக்கப்படவுள்ள நிலையில் அவற்றின் சம்பிரதாயபூர்வ மான நாள் வேலைகள் கடந்த வெள்ளிக்கி ழமை ஆரம்பிக்கப்பட்டன.

சாவகச்சேரிப் பிரதேசசபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இந்த அபிவிருத்திதிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஏ-25,159)





வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆல யத்தில் 2ஆம் நாள் திருவிழாவில் முருகப் பெருமான் மயில் வாகனத்தில் எழுந்த ருளி வீதியுலா வந்து அருள்பாலித்தார். (ஏ-25, 17)



# சுற்றுலாத்துறை முதலீடுகள் தொடர்பாகக் கலந்துரையாடல்

சுற்றுலாத்துறையில் இந்திய முதலீட்டா ளர்களின் காணிக் குத்தகைச் செயற்பா டுகள் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்திய முதலீட்டாளர்கள் இலங்கையுடன் இணைந்த வகையில் யாழ்ப்பாணப் பகுதிகளில் ஆன்மிகம் மற் றும் ஆரோக்கிய, சுற்றுலாத்துறை களில் முதலீடுகளை மேற்கொள்வதில் காணிக்குத்தகை ஏற்பாடுகளின் முன் னேற்றம் தொடர்பாக அதில் கலந்துரை யாடப்பட்டது. கலந்துரையாடலில் இலங்கைச் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் முதலீட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட மேல திகச் செயலர், இந்திய முதலீட்டாளர் குழு, கரையோர வளங்கள் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவப் பிரிவின் பொறியியலா ளர், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், மருதங்கேணிப் பிரதேச செயலாளர், பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலா ளர் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர் புடைய உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஏ-41-66)

# வட்டு. துணவி சிவன் ஆலய கும்பாபிஷேகம் மிக விரைவில்

யாழ்ப்பாணம், ஓக.26

வட்டுக்கோட்டை துணவி சிவன் ஆலயத்தின் மீள் உருவாக்கப் பணிகள் தற் போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில் மிக விரைவில் கும்பாபி ஷேகம் நடத்தி மக்களின் வழிபாட்டுத் தலமாக்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினர் தெரிவித்துள்ளனர்.

400 வருடங்கள் பழமையான எமது அடையாளச் சின்னமாகத் திகழ்கின்ற வட்டுக்கோட்டைத் துணவி சிவன் ஆலயம் பல ஆண்டுகளாக கவனிப்பாரின்றிக் காணப்பட்டது. இந்தநிலையில் அமெரிக்காவில் வசிக்கும் கைதடியைச் சேர்ந்த கலாநிதி.சிவயோகநாதனின் மகள் பாலயோகஸ்தினி சிவயோகநாதன் ஆல யத்தை மீள் உருவாக்கம் செய்வதற்கான நிதி உதவி வழங்கியிருந்தார்.

துணவி சிவன் ஆலயத்தை மீள் உருவாக்கம் செய்வதற்கான பணிகள் கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேரா சிரியர் பரமு புஸ்பரட்ணம் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டு, தற்போது நிறைவுக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்தல், எண்ணெய்க்காப்புச் சாத்துதல் மற்றும் மகா கும்பாபிஷேகம் தொடர்பான விபரங்கள் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தால் விரைவில் அறிவிக்கப்படும் என்று யாழ்ப்பாண மரபுரிமை மையத் தினர் குறிப்பிட்டுள்ளனர். (ஏ-25,66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விபத்தில் ஆசிரியை காயம்

பளை, இத்தாவில் சந்தியில் நேற்று நடந்த விபத்தில் ஆசிரியை ஒருவர் காயமடைந்துள்ளார். இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் காயமடைந்த ஆசிரியை பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் பளை பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-25-9)

25 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 14 . 03 . 1936

மறைவு 25 . 03 . 2019

அமரர் அம்பலவாணர் குலசேகரம் (J.P)

(இளைப்பாறிய நூலகர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

என்றும் உங்கள் நினைவுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

கைதடி,
நுணாவில், சாவகச்சேரி.

CS/59126) J-1

மனைவி,
பிள்ளைகள்.

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.26

ஊர்காவற்றுறை நாராந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு "பெரிய புராணம்" எனும் விடயப்பொருளில் தொடர் சொற்பொழிவு நாளைமறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமைவரை தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் ஆன்மிகச் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

★★★★

யாழ்ப்பாணம், ஓக.26

சைவ வாழ்வியலில் திருவிளையாடற் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் நடத்தப்படும்வாராந்தத்திருவிளையாடற் புராணச்சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடத்தப்படும் நிகழ்வில் பரஞ்சோதிமுனிவர் குருபூசையைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்கபூஷணம் பொன். சந்திரவேலின் "விருத்த குமார பாலரண படலம்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

★★★★

யாழ்ப்பாணம், ஓக.26

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச்சுக்கிரவாரக் கந்தபுராணப்படனத்தொடர் சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்த குரு ஞானபானு. சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள் ஆசியுரையையும், பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும், சைவப்புலவர், பிரசங்க பூஷணம் ச. முகுந்தன் "திக்குவிசயப் படலம்" எனும் விடயப் பொருளில் சிறப்புச்சொற் பொழிவையும் நிகழ்த்துவர்.

சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

மரண அறிவித்தல்

இந்திராவதி கந்தசாமி (மணி)



தோற்றம் 02.02.1949

மறைவு 25.08.2025

யாழ்ப்பாணம் கந்தர் மடம் மணல்தறை வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இந்திராவதி கந்தசாமி அவர்கள் நேற்று (25.08.2025) திங்கட்கிழமை சிவபாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - தனபாக்கியவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மணிவண்ணன் மற்றும் கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாவேந்தன் அவர்களின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தமிழ்க்கவி மற்றும் கவிப்பிரியா, அபிநயா, தமிழ்மாறன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், மதிவதனசேகரம், வரதசேகரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற கெங்காதரதேவி மற்றும் கனகபூஷனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 43/1, மணல்தறை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கார்த்திகா (மகள்)(ஜேர்மனி) - +49 176 61054259
அரசி (மருமகள்) - +94 76 997 9234
பிரபாகரன் (பெறாமகன்) - 0770711409
சேகர் (அண்ணா) - +4915211313193

(CR/59232) J-1

தகவல்:
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 10 . 1947

இறப்பு 23 . 08 . 2025



விஸ்வகுல திலகர் இரத்தினம் தங்கேஸ்வரன் (பத்தர்)

கலைமகள் வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட இரத்தினம் தங்கேஸ்வரன் அவர்கள் கடந்த (23.08.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-இரத்தினம் தம்பதியரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், இதயராணி அவர்களின் பாசமிகு கணவரும், இரத்தினாகரன், லக்சிகா, தயானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிவேஜா, தசீந்திரன், ஜனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவானி, சக்தி, தங்கவேலன், கரீஷ்மன், டிசான், ஸப்ரிதி, சாயித்தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் கலைமகள் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
076 948 4387 (தசி)
077 072 4964 (ஜனா)
076 918 4024 (தயானி)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் சதுர்த்தி விசேட தீர்த்தவாரி

யாழ்ப்பாணம், ஓக. 26

ஆவணி சதுர்த்தி தினமான நாளை, இருபாலை திருவருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் தீர்த்தவாரி இடம்பெறவுள்ளது என்று தேவஸ்தான சபையினர் தெரிவித்துள்ளனர்.

காலை 6 மணிமுதல் மாலை 3 மணிவரை இந்தத் தீர்த்தவாரி இடம்பெறும். அதைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசையும், தொடர்ந்து பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும் என்றும் தேவஸ்தான சபையினர் அறிவித்துள்ளனர். (ம)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் விசுவாவசு வருடப் பெருந்திருவிழாவின் இருபத்தேழாம் நாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வைரவர் உற்சவம் இடம்பெற்றது. (எ-41-66)

# யாழ். பல்கலைக் கழகத்தில் உலக சம்ஸ்கிருத தினம்!

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தில் சம்ஸ்கிருதத்துறையின் ஏற்பாட்டில், உலக சம்ஸ்கிருத தினம் இன்று கொண்டாடப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் கலந்துகொள்ளவுள்ளார். (ம)


## மரண அறிவித்தல்

### திரு.திருமதி கந்தையா தெய்வநாயகி



காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும், தன் வாழ்வின் முற்பாதியை தொண்டைமானாறு செல்லச் சன்னிதியையும், பிற்பாதியை உடுப்புட்டியையும் தனது வாழ்விடமாகவும் கொண்ட திரு திருமதி கந்தையா தெய்வநாயகி அவர்கள் கடந்த (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று சன்னதி முருகன் திருவடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி பொன்னுத்திரை மாணிக்கம் தம்பதியரின் இரண்டாவது புதல்வியும், காலஞ்சென்றவர்களான மகேந்திரராசா, ரவீந்திரராசா மற்றும் மகேந்திரராணி, வசந்தராதேவி, முருகமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் தங்கேஸ்வரி, ஸ்ரீஷ் காந்தராஜா, புஷ்பமலர் ஆகியோரின் அன்பு சகோதரியும், பிரணவானந்தன், செந்தமிழ் செல்வி, விஜயவீரன், பத்ம ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வகுமார், செல்வகுமாரி, செல்வரதி, நிதர்ஷினி, அபிமன்யு, அபர்ணா, காண்டீபன், தேனுரேகா, தாட்சாயினி, சுபாஜினி, திருகுமரன் நளாயினி, பிரவின் சரண், பிரசானி ஆகியோரின் பாசமிகு பாட்டியும், பிரஷாந், தரணியா, சுகன்சிகா, எழிலன், அகரன், நிகிலன், இளநிலா, றிஷானி, அக்ஷயா, அஸ்வின், அனுஷன், ஹாரிணி, ஹான்சிகா, அஸ்வின், அஜய் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொண்டமனாறு காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

076 441 8386
077 766 6276

## காணி விற்பனைக்கு

சங்குவேலி தெற்கு மானிப்பாயில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(தரகுக்கட்டணம் வழங்கப்பட மாட்டாது)

தொடர்புகளுக்கு:
**075 340 9000**

## மேசன் வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் முன்னணியில் இயங்கிவரும் ஒப்பந்த நிறுவனம் ஒன்றுக்கு மேசன், கூலி வேலையாட்கள் தேவை.

சாப்பாடு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **076 980 6787**


# கும்பாபிஷேகம்

*யாழ்ப்பாணம், ஓக.26*

நீர்வேலி அச்செழு அருள்மிகு காளி அம்பாள் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.53 மணி தொடக்கம் 8.52 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நீர்வேலி கதிர்காம முருகன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ தி. மயூரகிரிக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (எ-41)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
14 . 04 . 1974

ஆண்டவன் அடியில்
07 . 09 . 2024



அமரர் உதயகுமாரி (அமுதா) தயாரூபன்

கடந்த 07.09.2024 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி அமரர் உதயகுமாரி (அமுதா) தயாரூபன் அவர்களின் முதலாம் ஆண்டு திவசக் கிரியைகள் எதிர்வரும் 27.08.2025 புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். **இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகக் கொண்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

292, பிரதான வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 299 9480

## மரண அறிவித்தல்



### திருமதி. சந்திரசேகரம் மகேஸ்வரி

சிறுபிட்டி மேற்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சந்திரசேகரம் மகேஸ்வரி அவர்கள் நேற்று (25.08.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெள்ளைக்குட்டி - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சந்திரசேகரம் அவர்களின் பாசமிகு மனைவியும், நந்தினி, ஜெயபாபு (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தில்லைவாசன் (ஆயுள்வேத வைத்தியர்), கல்யாணி (சுவிஸ்), மதிவதணி, சித்திரா (ஆசிரியை), கணேஸ்சானந்தன் (மருத்துவர் தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலை), சண்முகானந்தன் (ஆசிரியர்), அம்பிகா, குகானந்தன், ஞானசேகரம், மைதிலி, சர்வாம்பிகை ஆகியோரின் மாமியாரும், உதிசன், தானுசன், கவின் (சுவிஸ்), கனிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசமணி, கந்தையா, மனோன்மணி, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி, கமலாதேவி, சந்திரசேகரம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான திருலோகநாயகி, அற்புதநாயகி மற்றும் இராசநாயகி, ஸ்ரீறங்கநாயகன், அருந்தவநாயகன், செல்வநாயகி, ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு.
நீர்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்.


# நூல் வெளியீடு

எழுநாவின் ஏற்பாட்டில் காவேரிக் கலாமன்றத்தின் அனுசரணையுடன் விவசாயபீடத்தின் சமுதாய மேம்பாட்டுக்குழுவின் ஆதரவுடன் கலாநிதி எஸ். ஜே. அரசகேசரியின் 'வடக்கு-கிழக்குப் பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும்' எனும் நூலின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கிளிநொச்சி வளாகத்திலுள்ள விவசாயபீடக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (எ-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தையர்மடம் விநாயகருக்கு அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.26

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 5.30 மணி மற்றும் 6.45 மணிக்கு சாயங்காலப் பூசையும், இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் இடம்பெற்று சுவாமி வீதி உலா இடம்பெறும். (எ-25, 17)



# செட்டிகுளம் பிரதேசத்தில் பண்பாட்டுப் பெருவிழா

வவுனியா, ஓக.26

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகம் ஆகிய வற்றின் இணை ஏற்பாட்டில் பிரதேச பண்பாட்டு விழா அமரர் ஆதிநாதன் விஜயநாதன் அரங்கில் அண்மையில் இடம்பெற்றது. சின்னச்சிற்பிகுளம் தாருல்உலூம் முஸ்லீம் மகாவித்தியால மாணவர்களின் றபான் நடனம், நிருத்தியார்ப்பனா நாட்டியக் கல்லூரி மாணவன் பா.கோகுலனின் தனிநடனம், செட்டிகுளம் பங்கு மறைக்கல்வி மாணவர்களின் கிறிஸ்தவ மதம்சார் கலாசார நடனம், ஸ்ரீ சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கதம்பம், நிருத்தியார்ப்பனா நாட்டியக் கல்லூரியின் கிராமியநடனம் என்பன நிகழ்வை மெருகூட்டின.

அதனைத்தொடர்ந்து பிரதேசத்தில் கலை, பண்பாட்டுத் துறைகளில் வியாபித்துவரும் கலைஞர்களுக்கு வெங்கல ஜோதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், "கட்டச்சி" சிறுகதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூல் ஆய்வுரையைப் பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி ஆசிரியர் சி.வரதராஜன் நிகழ்த்தினார். (ச-25, 110)



# யாழ். மருத்துவச் சங்கத்தால் வீதி விபத்து விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ். போதனா மருத்துவமனை மருத்துவச் சங்கத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வீதி விபத்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், போக்குவரத்து ஆணையாளர், சட்ட மருத்துவ நிபுணர் க.மயூரன், சிறுவர் குழந்தை சத்திரசிகிச்சை நிபுணர் ப.சயந்தன் உள்ளிட்டோருடன் உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25,27)

உலக மனிதநேய தினத்தை முன்னிட்டு சர்வதேச மனித உரிமைகள் குளோபல் மிஷன் அமைப்பின் யாழ்ப்பாணக் கிளையினரின் ஏற்பாட்டில் யாழ். ஓட்டுமடம் ஞானக்குழந்தை முன்பள்ளியில் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ச-25)



# பஸ் நிலையங்கள் தூய்மை; வடக்கில் 9 இடங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.26

'தூய இலங்கை' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக நாடு முழுவதும் 50 பேருந்து நிலையங்களைத் தூய்மைப்படுத்தல் மற்றும் புனரமைத்தல் செயற்றிட்டத்தின்கீழ் வடக்கில் 9 பேருந்து நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், நெல்லியடி, பளை, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மன்னார், நானாட்டான், வவுனியா, வெங்கலச் செட்டிகுளம் ஆகிய ஒன்பது பேருந்து நிலையங்களே இந்தத் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன்போது கிளிநொச்சி நகரப் பேருந்து நிலையம் இதில் தெரிவுசெய்யப்படாமையால் அதனையும் இதில் உள்வாங்கத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமையால் அதற்குப் பதிலாக மாங்குளம் பேருந்து நிலையத்தை இந்தத் திட்டத்தில் உள்வாங்குவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதுதொடர்பிலான மாகாணமட்டக் குழுவின் முதலாவது கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ச-25, 66, 20,113)

# சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு ரோட்டரிக் கழகத்தினால் ஆடைகள்

வவுனியா, ஓக.26

ரோட்டரிக் கழகத்தினால் வவுனியா மாநகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்குப் புதிய ஆடைகள் வழங்கும் நிகழ்வு மாநகரசபை கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. அத்துடன் சுகாதாரத் தொழிலாளர்களுக்கான மருத்துவ முகாம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் வவுனியா மாநகரசபை முதல்வர் சு. காண்டீபன், உப முதல்வர், மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள், ரோட்டரிக் கழகத்தின் வவுனியா சிட்டி உறுப்பினர்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-110,18)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்திய...

டுள்ள நிலையில் அவற்றை மீட்டுச் செல்வதற்காக இந்திய மீனவர்கள் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளது.

அத்துமீறிய மீன்பிடிக்காகப் பயன்படுத்தப்பட்ட ஏழு விசைப்படகுகள் 2023ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்தன. எனினும், இலங்கையில் நிலவிய ஆட்சி மாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அந்தப் படகுகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்தநிலையில், தற்போது அந்தப் படகுகளை மீட்பதற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இதையடுத்தே, படகுகளை மீட்டுச் செல்வதற்காக அந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

மயிலிட்டித் துறைமுகத்தில் குறித்த விசைப்படகுகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அவற்றின் தற்போதைய நிலை தொடர்பில் இந்தியாவில் இருந்து வருகைதந்த குழுவினர் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-100)

## வடக்கு-...

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், தமிழீழ விடுதலைக்கழகத்தின் தலைவர் த. சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரகுமார், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோருடன் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு நேற்று ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார்கள். இதன்போதே, இந்த கையெழுத்துப் போராட்டம் தொடர்பான அறிவிப்பை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் பல்வேறு இடங்களில் மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலான புதைகுழிகள் வடக்கு கிழக்கில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியாது.

தற்போது செம்மணி மனிதப் புதைகுழிகளில் அகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அதில் 140க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 90 வீதமானவை ஆடைகள் அற்ற நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் குழந்தைகளின் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு சர்வதேச விசாரணைகள் கோரியும் சர்வதேச நிபுணர்களின் கண்காணிப்பில் அகழ்வுப் பணிகள் முன்னெக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுமே இந்தக் கையெழுத்துப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன - என்றனர். (அ-ம-20-26)

## காணாமல்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக், அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து செம்மணி மனிதப் புதைகுழியைச் சென்று பார்வையிட்டார். அவருடைய இந்தச் செயல் நீதிக்கான ஆரம்பப் புள்ளியாக அமையும் என்று நம்பினோம். ஆனால், எங்களின் நம்பிக்கை பொய்யாகிப் போய்விட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி உள்ளகப் பொறிமுறையை எம்மிடம் திணித்துச் சென்றது போன்று அவரது கருத்து அமைந்துள்ளது. நாம் சர்வதேச விசாரணையைத்தான் கோருகின்றோம். அதற்கான வலியுறுத்தலையே இன்றும் முன்வைக்கின்றோம். எனவே, எமக்கு உள்ளகப் பொறிமுறை வேண்டாம். அதை நாம் நம்பவில்லை.

எதிர்வரும் 30ஆம் திகதியன்று காலை செம்மணியில் போராட்டமொன்றை வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ளோம். குறித்த போராட்டத்துக்கு மதத் தலைவர்கள், பல்கலைக்கழகச் சமூகம், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புகள், அரசியற் கட்சிகள் என அனைத்துத் தரப்பினரும் பேதங்களைக் களைந்து கலந்துகொள்ளவேண்டும் - என்றனர். (அ-ம-66-26)

## பன்றிகளால்...

ரணிலின் கைது தொடர்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணிலுடன் எனக்கு அரசியல் ரீதியிலான கருத்து மோதல்கள் இருக்கலாம். அதற்காக, அவருக்கு இவ்வாறான அநீதி இழைக்கப்படும்போது வேடிக்கை பார்க்கமுடியாது. தேசிய மக்கள் சக்தி செய்துள்ள தவறின் பாரதூரம் விரைவில் தெரியவரும்.

ரணில் உட்பட முன்னாள் ஜனாதிபதிகள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளின் ஒரு சதவீதத்தையேனும் தற்போதைய அரசாங்கம் ஆற்றவில்லை என்பதே உண்மை. ரணில் விக்கிரமசிங்கவின் கைது நடவடிக்கை திட்டமிட்ட அரசியற் பழிவாங்கல் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. எனவே, ரணிலைக் காப்பாற்றுவதற்காக அரசியற் பேதங்களைக் கடந்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணையவேண்டும் - என்றார். (அ-ம-44)

## தனிக்கட்சி...

போது ரணில் விக்கிரமசிங்கதான் சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டார். அவருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளித்தது. அந்த முடிவு தொடர்பில் இன்றும் நாம் பெருமையடைகின்றோம். ரணில் முன்வைத்த சிறப்பான அடிதளத்தால்தான் இந்த அரசாங்கத்தால் பயணிக்கக் கூடியதாக உள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்தது. அவற்றை தற்போது நிறைவேற்ற முடியாதுள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்ற முடியவில்லை. அதனால்தான் எதிரணிகளை முடக்கி தமது இருப்பை தக்கவைப்பதற்கு முயற்சிக்கின்றது.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்களே அந்தக் கட்சியை விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். அரசாங்கம் செய்யும் தவறுகளை கண்டு நாம் அமைதி காக்கப்போவதில்லை. ஆட்சியை கவிழ்க்க முற்படவில்லை. ஆனால் தவறு நடந்தால் நிச்சயம் அவற்றைச் சுட்டிக்காட்டுவோம்.

எதிரணிகளை ஒடுக்கி தனிக்கட்சி ஆட்சியை முன்னெடுக்கவே முயற்சி எடுக்கப்படுகின்றது. ஆனால் இலங்கை போன்ற நாட்டில் அந்த நிலைமையை ஏற்படுத்துவது கடினம் - என்றார். (அ-ம-44)

## பல்கலைக்கழக...

பல்கலைக்கழக அனுமதிக்கான 'சற்ஸ்கோர்' விவரங்களைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## பிரதிவாதிகளின்...

குறித்த மனுக்கள் நீதிபதிகள் பிரீத்தி பத்மன் சூரசேன, அச்சலா வெங்கப்புலி மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வில் விசாரிக்கப்பட்டுள்ளன. இதன்போது, பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, நீதிமன்றத்தின் முன் சாட்சியங்களை முன்வைத்து, வழக்கின் தமிழ் மொழிபெயர்ப்புகளைப் பெற நான்கரை ஆண்டுகளுக்கும் மேலாக ஆனதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்காரணமாக மேல்முறையீட்டு விசாரணைக்கு குறுகிய திகதி வழங்குமாறு நீதிமன்றத்தை கோரியுள்ளார்.

இந்த மேல்முறையீடுகளை விரைவாக விசாரிக்க குறுகிய திகதி வழங்கப்படும் என்று தலைமை நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேன தெரிவித்துள்ளார்.

அதன்படி, தொடர்புடைய மேன்முறையீட்டை நவம்பர் மாதம் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி பாடசாலையில் இருந்து திரும்பிக்கொண்டிருந்தபோது சிவலோகநாதன் வித்தியா என்ற பாடசாலை மாணவியைக் கடத்தி, கூட்டு வன்புணர்வின் பின்னர் கொலை செய்த குற்றச்சாட்டில் ஏழு பேருக்கு எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் 2017ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்தது.

தங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது என்றும், எனவே தங்களை விடுதலைசெய்து குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கவேண்டும் என்றும் கூறி, பிரதிவாதிகள் தங்கள் சட்டத்தரணிகள் மூலம் உயர் நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டு மனுக்களை தாக்கல்செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ரணிலின்...

'ஜனநாயகத்தை நேசிக்கும் அனைவரும் கட்சி பேதங்களைக் கடந்து கொழும்பில் ஒன்றுதிரளவேண்டும்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் அழைப்பு விடுத்துள்ளார்.

ரணில் கைதுசெய்யப்பட்ட விவகாரத்தில் முழுக்கமுழுக்க அரசியற் பழிவாங்கலே காணப்படுகின்றது. அவருடைய பிணைக்காக முன்வைக்கப்பட்ட எந்தவொருவிண்ணப்பத்தையும் பொலிஸார் கருத்திற்கொள்ளவில்லை. இது ஜனநாயக விரோதச் செயற்பாடாகும். ரணிலின் உடற்தகுதி தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிணைக் கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டன என்று அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## 108...

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நாளைமறுதினம் 28ஆம் திகதி காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையான சுபவேளையில் 108 திருமணங்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான 108 தாலி, கூறைச் சாறி, வேட்டி சால்வை மற்றும் இதர செலவுகள் அனைத்தும் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக்கொண்டு சிங்கப்பூரில் வசித்து வருகின்ற துரைசுமதி குடும்பத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 15 பிரதேச செயலகங்கள் ஊடாக வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த திருமணத் தம்பதிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கே திருமணம் நடத்திவைக்கப்படவுள்ளது - என்றார். (அ-ம-66-26)

## செம்மணி...

அகழ்வெல்லை அகலிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதைகுழியில் இருந்து இதுவரை 150 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவை அனைத்தும் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இன்றையதினம் அகழ்வுப் பணிகள் தொடரவுள்ளன.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது அகழ்வுப் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கவேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்ட நிலையில், அந்தக் கோரிக்கை நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டது. அதற்கான பாதீட்டைத் தயாரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே, புதைகுழியின் அகழ்வெல்லை அகலிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒகஸ்ட் மாதத்துக்கான முதியோர் கொடுப்பனவு

சாவகச்சேரி, ஓக. 26

தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் நேற்றுத் திங்கட்கிழமை முதல் ஒகஸ்ட் மாதத்துக்குரிய முதியோர் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அஞ்சலகத்தினர் அறிவித்துள்ளனர். கடந்த வாரக் கொடுப்பனவுகளுக்கான பட்டியல் பிரதேச செயலகத்துக்கு வந்தபோதிலும் அஞ்சல் அலுவலகப் பணியாளர்களின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பப்படவில்லை. தற்போது அஞ்சல் பணியாளர்கள் கடமைக்குத் திரும்பியதையடுத்து கொடுப்பனவுக்கான பட்டியல் அஞ்சல் அலுவலகங்களில் கையளிக்கப்பட்டுள்ளன. அதையடுத்துக் கொடுப்பனவு வழங்கப்பட்டுவருகின்றது. (எ-25,9)

**மணல் விற்பனைக்கு**

கட்டட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப் பத்திரம் போட்டு தரப்படும்.(யாழ் மாவட்டத்திற்கு 55,000/= ரூபாய்)

தொடர்புகளுக்கு: 076 3249 977 077 4121 100

(CS 59178) A

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து வழங்கப்பட மாட்டாது. ஏக்கர் 13 இலட்சம்.

தொடர்பு : Whatsapp : 0044 740 537 3526

(CS 59217) E



# பண்டாரவன்னியனின் வெற்றியைத் தாங்கிய பெயர்ப்பலகை திரைநீக்கம்

முல்லைத்தீவு, ஓக.26

வன்னிப் பெருநிலப்பரப்பின் இறுதிமன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவில் அமைந்திருந்த ஒல்லாந்தக் கோட்டைமீது தாக்குதல் மேற்கொண்டு வெற்றியீட்டிய 222ஆம் ஆண்டு வெற்றிநாள் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் முன்னெடுக்கப்

பட்டது. ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த முல்லைத்தீவுக் கோட்டை, அந்நியப் படையெடுப்புகளை எதிர்த்து வீரமுடன் போராடிய பண்டாரவன்னிய மன்னன் தலைமையிலான படைகளால் மாதம் 25ஆம் அன்று கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. கோட்டையின் எச்சம் இன்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் பாதுகாப்பட்டுவரும் நிலையில், இந்தத் தகவல்கள் அடங்கிய அறிவிப்புப் பலகை நேற்றுத் திரைநீக்கம் செய்யப்பட்டது. மாவட்டச் செயலக வளாகத்தில் தற்போது அழிவடைந்த நிலையில் காணப்படும் முல்லைத்தீவுக் கோட்டை ஒல்லாந்தரால் கட்டப்பட்டது. 1715ஆம் ஆண்டில் மரத்தாலும் மரவேலிகளாலும் இந்தக் கோட்டை நிறுவப்பட்டது. 1721ஆம் ஆண்டில் நாற்பக்க லாந்தரால் கட்டப்பட்டது. இந்தக் கோட்டை பிரித்தானியரால் 1795ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டது. 1803ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி பண்டாரவன்னியனால் இந்தக் கோட்டை கைப்பற்றப்பட்டு இடித்தழிக்கப்பட்டது. அதேவேளை, வெற்றிநாள் நிகழ்வுகள் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டிலும் நடைபெற்றன. முல்லைத்தீவு நகரில் உள்ள பண்டாரவன்னியனின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, அஞ்சலி நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. (எ-19)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திருமதி.ராஜரட்ணம் பாக்கியம்

**திதி: ஆவணி மாத பூர்வபக்க கிருதியை**



ஈரவிழிகளுடன் எம் இதயத்தெய்வத்தை
எண்ணிப் பார்க்கின்றோம்
இதயங்கள் கனக்கின்றன
எழுத முடியவில்லை
நெஞ்சின் துயரச் சுவடுகளும்
கண்களின் உதிரிப் பூக்களும்
உங்கள் பாதக் கமலங்களை அர்ச்சிக்கின்றன
எங்கள் பாதங்கள் பூமியில் ஈரத்தோடு பதிகின்றன
தாயாய் தந்தையாய் எமை வளர்த்து
கல்விக் கண் திறக்க வைத்து
எங்கள் வாழ்வை மலரச் செய்தீர்கள்
உங்கள் உதிரம் சிந்தி உழைத்தவற்றை
எமக்கு ஆதாரமாகத் தந்து ஆறுதலடைந்தீர்கள்
செத்தும் கொடுத்த சீதக்காதிபோல்
வாரி வழங்கினீர்கள்
நீங்கள் என்றும் எங்கள் இதயங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்

மலர்வு 17.03.1936 உதிர்வு 05.09.2024

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

(CS 59233) E



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org